1978 மார்ச் 11] [திரு. சி. பொன்னையன்]

இந்த ஆணையைச் செயல்படுத்த வேண்டாம் என்று பலர் கோரிக்கைகள் விடுத்திருப்பதால் டேக்கோ மீட்டர்களும், டேப்புகளும் தாராளமாக கிடைக்கும் வரை இக்கோரிக்கைகளை ஏற்று, திருத்திய 325-எ விதி செயல் படுவதை 30-6-78 வரை ஒத்தி வைக்கலாம்.

எனவே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க இப்பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினல் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்கள் பிரச்னை குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 தமிழாசிரியர்கள் பணியிறக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டு அமைச்சர் அவர்கள் அறிக்கை வைப்பதாகச் சொன்னர்கள். துணை சபாநாயகர் அவர்கள்கூட அன்றைக்கு இருந்தார்கள். அந்த அறிக்கையை எப்போது வைப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தத் தீர்மானத்தைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பெயரும் இந்த சட்டமன்றத்திலே சொல்லப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அது ஒத்திவைப்புத் தீர்மானமாக இங்கே எழுப்பப்பட இருந்தது. ஆனல், ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்த நேரத்திலே, இந்த அவையிலே உறுப்பினர்கள் யாரும் இல்லாததால் அது சொல்லப்படாமல் போய்விட்டது. மறுபடியும் இந்த அவையிலே அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.